**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.6/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : இந்து |
| த/பெ | : நீலகண்டன் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : எட்டியாந்தாங்கல் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**07.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 25.11.1957ம் தேதியிட்டு பரசுராம நாயுடு என்பவர் ஆஞ்சியம்மாள் சரோஜம்மாளுக்கு எழுதி கொடுத்த பதிவு செய்த கிரைய ஆவணம் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 21.07.2023 ம் தேதியிட்டு என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1741ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)